www.newwisdomministries.com

# ஞான ஒலி



# அவரருகிலா? என்னருகிலா?



ஞானம் 07 – ஒலி 11 – 17.03.2024



# ஆசிரியர் பக்கம்

ஆண்டவர் இயேசுவில் எனக்குப் பிரியமான இணைய இதழ் ஞான ஒலியின் பெருமைமிக வாசகப் பெருமக்களே உங்கள் அனைவருக்கும் என் பணிவான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இதுவரை நீங்கள் எங்களுக்குத் தருகின்ற பேராதரவிற்கு என்றும் நன்றிக் கடன்பட்டிருக்கின்றோம். உங்களின் வல்லமையுள்ள செபத்தில் எங்களின் இந்த இறைப்பணி தொடர்ந்து நடைபெற செபிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

உண்மையில் நாம் யார் என்பதையும், நம்மைப்பற்றிய பேருண்மையையும், நமக்குள் இருக்கும் ஆற்றலையும், மகத்துவத்தையும் இன்னும், இன்றும் அறியாமல் இருக்கின்றோம் என்று சொன்னால் அது மிகையாகாது.

அதை நமக்கு உணர்த்துவதற்கு தத்தவப் பேராசான் சாக்ரடீஸ் அவர்கள் உன்னையே நீ அறிந்துகொள் என்றும், நான் யாரையும் மாற்றவோ, திருத்தவோ விரும்பவில்லை மாறாக அவர்களை சிந்திக்க வைக்கவே விரும்புகின்றேன் என்றும் சொன்னார்.

படைக்கப்பட்ட ஒவ்வொருவரும் தனித்தே இயங்கவும், தனக்குள் கொடுக்கப்பட்ட அனைத்து அருள் வரங்களையும் கொண்டு வாழவேண்டும் என்பதே இயற்கையின் நியதி. அனைத்து உறவுகளையும் கொண்டு வாழும் மனிதனைவிட, பிறந்தபோதே அனாதையாக்கப்பட்டவர் பிழைக்கும் வாழ்வு இந்தப் பேருண்மையைத்தான் எடுத்துக் கூறுகின்றது.

மனித இனம் சமூகமாகவே வாழ பணிக்கப்பட்டுள்ளது. ஆனால், தனி மனித உண்மை என்று வருகின்றபோது, வாயும் வயிறும் வேறு என்ற உண்மை உயர்ந்தோங்கி நிற்கின்றது. மூச்சிழுக்கவும், உண்ணவும், இயங்கவும், உழைக்கவும் தனியுயிரைச் சார்ந்தது. அதற்காக எந்த உயிரும் உதவ முடியாது. அந்தப் பேருண்மை, மனிதப் பிறவியின் மறைந்துள்ள பேருண்மையையும், மகத்துவத்தையும் உணரவேண்டும் என்று உணர்த்துகின்றது. அதை விளக்க ஒரு புத்தக் கதை ஒன்று சொல்லப்படுகின்றது. அதை இங்கு தொடர்ந்து படிப்போம்.

ஒரு இறைஞன் ஞானம் பெற வேண்டும் என்று ஒரு நாள், புத்த துறவிகள் வசிக்கும் ஒரு இல்லத்திற்குச் செல்கின்றார். அங்கு ஏராளமான இளம் புத்த துறவிகள் ஆங்காங்கே அமர்ந்து தியானம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவரை அணுகி, தம்பி, உங்களின் குருவை சந்திக்க வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவர், அதோ அந்த மரத்தடியில் அமர்ந்து, கண்களை மூடித் தியானம் செய்கிறாரே அவர்தான் எங்கள் குரு என்று சுட்டிக் காட்டினார். அந்த இளைஞன், அந்த குருவிடம் சென்று, ஐயா, குருவே, நான் முக்தி பெற ஆசைப்படுகின்றேன், அதற்காக நான் புத்தராக மாறவேண்டும் அதற்கு என்ன வழி என்று எனக்குக் கூற முடியுமா? என்று கேட்டார். அந்த குரு அவனை

கோபமாகப் பார்த்துவிட்டு மீண்டும் கண்களை மூடி தியானம் செய்ய ஆரம்பித்துவிட்டார். ஆனால், அந்த இறைஞன் அவரை பலமுறை கூப்பிட்டுக் கொண்டே இருந்தார். ஒவ்வொரு முறையும் அவரை கூப்பிடும்போது, சத்தத்தை அதிகப்படுத்திக் கொண்டே இருந்தார்...இறுதியாக அவனின் கூப்பிடும் சத்தம் அவரைத் தியானம் செய்ய முடியாத அளவிற்கு இருந்ததால், அவர் விருட்டென்று எழுந்து அவனிடம் வேகமாகப் போய், அவனது கன்னத்தில் ஓங்கி இரண்டு அறைவிட்டார். அவன் கன்னம் சிவந்துபோய், கீழே விழுந்து விட்டான். அந்தக் குரு மீண்டும் அந்த மரத்தடியில் அமர்ந்து கண்களை மூடித் தியானம் செய்ய ஆரம்பித்தார். அந்த இளைஞன், தனது கன்னத்தைத் தடவிக் கொண்டே அவ்விடத்திலிருந்து போய்விட்டான். குரு இருக்கும் இடத்தைக் காட்டினாரே அந்த இளம் துறவியிடம் சென்றார். அவர் என்னங்க உங்கள் கன்னம் இவ்வாறு வீங்கி இருக்கிறது...எங்கள் குருவைப் பார்த்தீர்களா? என்று கேட்டார். அதற்கு அந்த இளைஞன், என்னப்பா, உங்கள் குரு..இவ்வளவு முரடனா இருக்காரு என்று சொன்னார். அதற்கு உங்கள்களை அவர் அடிக்கும்படி அவரிடம் என்ன கேட்டீர்கள்? என்றார். அதற்கு அந்த இளைஞன்...நான் அப்படி ஒன்றும் பெருசாக் கேக்கல தம்பி, நான் புத்தராக வேண்டும், அதற்கு ஒரு வழியைக் கற்றுக் கொடுங்கள் என்றுதான் கேட்டேன்...அதுக்குப்போய், அந்த குரு இப்படி என் கன்னத்துல இரண்டு தடவை அடிச்சிட்டாரு என்றார். அதற்று அந்த இளம் துறவி...சிரித்துக் கொண்டு...இப்படிக் கேட்டால், அவர் உங்களை அடிக்காமல் என்ன செய்வார்...என்றார்...அந்த இளைஞனுக்கு ஒன்று புரியாமல்...நான் அப்படி என்னத்த தப்பா கேட்டுட்டேன்? என்று சொன்னார். அதற்கு அந்த இளம் துறவி...ஆமா...புத்தரே அந்தக் குருவிடம் போய் நான் புத்தாராக வேண்டும் அதற்கு என்ன வழி என்று கேட்டால்..உங்களை அடிக்காமல் என்ன செய்வார்...என்று சொன்னாராம். எங்கள் குரு உங்கள் மீது அளவில்லாத அன்பு வைத்ததால்தான் நீங்களே ஒரு புத்தர் அதை நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள் என்று உங்களுக்கு வலிக்கும் விதமாக இவ்வாறு அடித்துச் சொல்லி இருக்கின்றார். நீங்கள் உங்கள் கன்னத்தைப் பார்க்கும் போதெல்லாம் இப்போதே நீங்கள் புத்தராக இருக்கின்றீர்கள். அதற்கான வழி உங்களுக்குள்ளே இருக்கிறது என்பதை உணர்ந்துகொள்ளுமாறு குரு உங்களுக்குக் இவ்வாறு கற்றுத் தந்திருக்கின்றார் என்றார் அந்த இளம் துறவி.

இறைவன் நமக்குள்ளே இருக்கின்றார். அவரை எவ்வளவு ஆழமாகத் தேடுகின்றோமோ? அவ்வளவு கடவுள் நமக்குள் வளர்ந்து நம்மில் ஒன்றாக வாழ்கின்றார். ஆன்மீக முதிர்ச்சியின் உச்சத்தில் கடவுளும் நாமும் ஒன்று என்று நிலையை அடைவோம் என்ற உண்மையை உணர்வோம்.

புனித.புவுலடியார் கலாத்தியருக்கு எழுதிய மடலில் இரண்டாம் அதிகாரம் 19 மற்றும் 20ம் வசனங்களில் இதை வலியுறுத்திக் கூறுவதை இங்கு படிப்போம்.

நான் கடவுளுக்காக வாழ்கிறேன்.
கிறிஸ்துவோடு சிலுவையில்
அறையப்பட்டிருக்கின்றேன். எனவே,
இனி வாழ்பவன் நான் அல்ல,
கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்.

கிறிஸ்துவில் கொள்ளும் நம்பிக்கை நம்மை அவராகவே மாற்றும். அதிசயம்.



# விவிலியம் அறிவோம்




கத்தோலிக்கத் திருவிவிலியத்தில் 16 நூல்கள் வரலாற்று நூல்களாகக் கருதப்படுகின்றன. அவை முறையே, யோசுவா, நீதித்தலைவர்கள், 1 -2 சாமுவேல், 1- 2 அரசர்கள், 1 -2 குறிப்பேடுகள், எஸ்ரா, நெகேமியா, தோபித்து, யூதித்து, எஸ்தர், ரூத்து, 1- 2 மக்கபேயர் ஆகிய நூல்களாகும். இந்த நூல்கள் வரலாற்றை முழுமையாக, நடந்தது நடந்ததுபோல அப்படியேத் தரவில்லை. மாறாக வரலாற்றோடு இறையியலைக் குழைத்து வரலாற்று இறையியலாகத் தருகின்றன. எனவே இந்நூல்களை வரலாற்று இறையியல் நூல்கள் என அழைக்கலாம். விவிலிய அறிஞர்கள் இந்நூல்களை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். அவை முறையே, இணைச்சட்ட வரலாறு, குறிப்பேடுகள் வரலாறு, இறையியில் ஆய்வுக் கதைகள் மற்றும் மக்கபேயர் வரலாறு ஆகியவையாகும். இணைச்சட்ட வரலாற்றின் கீழ், யோசுவா, நீதித்தலைவர்கள், 1-2 சாமுவேல், 1-2 அரசர்கள் ஆகிய நூல்களும், குறிப்பேடுகள் வரலாற்றின் உள்ளடக்கமாக, 1 2 குறிப்பேடுகள், எஸ்ரா, நெகேமியா ஆகிய நூல்களும், இறையியல் ஆய்வுக் கதைகள்; என்ற தலைப்பின் கீழ், தோபித்து, யூதித்து, எஸ்தர், ரூத்து ஆகிய நூல்களும் மக்;கபேயர் வரலாறாக 1 -2 மக்கபேயர் நூல்களும் வருகின்றன. இந்த நான்கு பிரிவுகளையும் தனித்தனியாகச் சுருக்கமாகச் சிந்திப்போம்.

1.இணைச்சட்ட வரலாறு: யோசுவா, நீதித்தலைவர்கள், 1-2 சாமுவேல், 1-2 அரசர்கள் ஆகிய நூல்களை உள்ளடக்கமாக இணைச்சட்ட வரலாறு கொண்டுள்ளது. ஏன் இந்த நூல்கள் இணைச்சட்ட வரலாறு என அழைக்கப்படுகின்றன? என்ற கேள்வி நம்மிலே எழலாம். வரலாற்றுப் பார்வையில் இந்நூல்கள் இணைச்சட்ட நூலின் தொடர்ச்சி என அறிஞர்கள் கருதுகின்றனர். இணைச்சட்டம் நூலில் காணப்படும் மொழி நடை, மரபுகள், இறையியல் இந்நூல்களிலும் பரவிக்கிடக்கின்றன. இணைச்சட்ட ஆசிரியர்களே இந்நூல்களுக்கு இறுதி வடிவம் கொடுத்திருக்கின்றனர். கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரயேல் மக்களை உறுப்பினர்களாகக் கொண்ட இஸ்ரயேல் மற்றும் யூதா ஆகிய நாடுகள் ஏன் வீழ்ச்சியுற்றன என்பதற்கான இறையியல் விளக்கங்கள் கொடுப்பதற்காகவும், எதிர்கால வாழ்விற்கான ஓர் எதிர்நோக்கு இறையியலைக் கொடுப்பதற்காகவும் இந்நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இந்த நூல்களின் இறையியலைப் புரிந்துகொள்வதற்கு இந்த நூல்கள் எழுதப்பட்ட காலச் சூழ்நிலைகளை அறிந்துகொள்வது அவசியம். கி,மு. 722 ஆம் ஆண்டு அசீரியர்கள் வடக்கு நாடான இஸ்ரயேலை வீழ்த்தினர். கி.மு. 587 இல் பாபிலோனியர்கள் எருசலேமை

வீழ்த்தினர். எருசலேம் வீழ்ச்சியுற்றபோது எருசலேமின் மாட்சியாக அமைந்திருந்த கோவில் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. மக்கள் தலைவர்கள் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டார்கள். நாடு கடத்தப்பட்டு அகதிகளாகப் பாபிலோனில் வாழ்ந்த காலம் மிகவும் துன்பங்கள் நிறைந்த காலம். இந்தச் சூழலில் மக்கள் மனங்களில் ஏராளமான கேள்விகள் எழுந்தன. உடன்படிக்கையின் மக்கள் என்ற முறையில் யஸவே கடவுள் அவர்களை காப்பதாகவும் வழி நடத்துவதாகவும் வாக்கு கொடுத்திருந்தார். அந்த வாக்குறுதி என்ன ஆனது? ஏன் ஆண்டவர் அவர்களைக் கைவிட்டு விட்டார்? கடவுளின் மக்களாக, உடன்படிக்கையின் மக்களாக அவர்கள் இருக்கிறார்களா? என்ற சந்தேகம் அவர்களிலே எழுந்தது. அவர்களுடைய எதிர்காலம் எப்படிப்பட்டதாக இருக்கும்? கடவுள் அவர்களின் முன்னோர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளுக்கு உண்மையுள்ளவராக இருப்பாரா? போன்ற கேள்விகள் அவர்கள் நடுவில் எழுந்தன. இந்தச் சூழலில்தான் இணைச்சட்ட வரலாற்று நூல்கள் பதிவுசெய்யப்பட்டன.

ஆசிரியர்களின் நோக்கமெல்லாம் இஸ்ரயேல் மக்கள் தங்களின் பாவச் செயல்களால்தான் இந்த இழப்புகளை சந்தித்தார்கள் என்ற உண்மையை அவர்களுக்குக் கூறவேண்டும் என்பதுதான். சீனாய் மலையில் மக்களோடு உடன்படிக்கை ஏற்படுத்திய ஆண்டவர், மக்கள் அந்த உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்த்தார். உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கம் இல்லாமல் வாழ்ந்தால் அதனால் வரக்கூடிய இழப்புகளைக் கூறி அவர்களை எச்சரித்தார். ஆனால் மக்கள் பாவம் செய்தனர். உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கம் இல்லாமல் செயல்பட்டனர். எனவே அவர்கள் நாடுகடத்தப்பட்டனர். பலவிதமான துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். இணைச்சட்ட வரலாற்று நூல்களின் இன்னொரு முக்கியநோக்கம் என்னவென்றால் மக்கள் மனம் திருந்தவேண்டும்; ஆண்டவரிடம் திரும்பி வரவேண்டும். உடன்படிக்கை விதிகளுக்குக் கீழ்ப்படிந்து ஆண்டவருக்கு உரியவர்களாக வாழவேண்டும். அப்படி நடந்தால் ஆண்டவர் மீண்டும் அவர்களைச் சந்திப்பார். அவர்களின் வாழ்வைப் புதுப்பிப்பார் என்பதையும் கூறுவதாக இருந்தது. பண்டைய காலத்தில் மனம் திருந்தி ஆண்டவரிடம் வந்த மக்களை அவர் ஏற்றுக்கொண்டார். அவர்களுக்குப் புதுவாழ்வு தந்தார். இதை மனதில் கொண்டவர்களாக மக்கள் செயல்பட வேண்டும். ஆண்டவர் அவர்களுக்கு மன்னிப்பு வழங்குவார். அவர்களின் குரலைக் கேட்டு புதுவாழ்வளிப்பார். மக்களின் பாவச் செயல்களால் ஆண்டவர் கொடுத்த வாக்குறுதிகள் முறிந்துவிட்டதைப்போல தோன்றுகிறது. அந்த வாக்குறுதிகளை ஆண்டவர் மறக்கவில்லை. மக்கள் மனம் திருந்தியவர்களாக அவரிடம் வந்தால் மீண்டும் அவர் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவு செய்வார். இணைச்சட்ட ஆசிரியர்களின் இந்த நோக்கங்கள் பல்வேறு வடிவங்களில் இந்த நூல்களில் வெளிப்படுகின்றன.

மேலும் யாவே கடவுளின் மீட்புத் திட்டம் இந்நூல்களில் வெளிப்படுத்தப்படுகின்றது. இஸ்ராயேல் மக்களின் வரலாற்றில் யாவேகடவுளின் மீட்புத் திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பதையும் இந்நூல்களில் காண்கிறோம். இஸ்ராயேல் மக்கள் பன்னிரு குலங்களின் கூட்டமைப்பாக செயல்பட்டபோதும்,

முடியாட்சி ஏற்பட்டு எல்லா மக்களும் ஒரே மன்னனின்கீழ் வாழ்ந்தபோதும், அரசில் பிளவு ஏற்பட்டு இரண்டு அரசுகளாக (இஸ்ராயேல் - யூதா) பிரிந்து வாழ்ந்தபோதும் யாவேகடவுளின் மீட்புத் திட்டம் எவ்வாறு இந்த மக்களில் செயல்படுத்தப்பட்டது என்பதை இந்நூல்கள் எடுத்துரைக்கின்றன. எனவே இந்நூல்கள் வரலாற்றை மட்டும் தரவில்லை. மாறாக மக்களின் நம்பிக்கையையும், அந்த நம்பிக்கையை அவர்கள் வாழ்ந்த விதத்தையும் வரலாற்றோடு இணைத்துத் தருகின்றன.

குறிப்பேடுகள் வரலாறு: 1-2 குறிப்பேடுகள், எஸ்ரா, நெகேமியா ஆகிய நூல்கள் குறிப்பேடுகள் வரலாறு என அழைக்கப்படுகின்றன. இந்த நான்கு நூல்களும் ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டிருக்கலாம் என்பது அறிஞர்கள் கருத்து. குறிப்பேட்டாளர் என அவர் அழைக்கப்படுகிறார். ஏனெனில் இந்த நூல்களின் வார்த்தை பிரயோகங்கள், மொழியமைப்பு, இறையியல் அனைத்திலும் ஒற்றுமைகள் உள்ளன. இந்த நூல்கள் இணைச்சட்ட வரலாற்றை பல வகைகளில் ஒத்திருந்தாலும் வேறுபாடுகளும் உள்ளன. இந்த நூல்கள் ஆசிரியருக்கு கோவில், அங்கு நடக்கின்ற வழிபாடுகள்;, குருக்கள், அதிலும் சிறப்பாகக் கீழ்மட்டத்திலுள்ள குருக்கள் மேலுள்ள பற்றையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துகின்றன. இணைச்சட்ட வரலாற்றில் லேவியர்கள் மூன்று இடங்களில் மட்டுமே காட்டப்படுகின்றனர். ஆனால் குறிப்பேடுகள் வரலாற்றில் முதலாம் குறிப்பேடுகள் நூலில் 35 இடங்களிலும், இரண்டாம் குறிப்பேடுகள் நூலில் 64 இடங்களிலும் வருகின்றனர். எஸ்ரா, நெகேமியா நூல்களிலும் பல இடங்களில் அவர்களைப்பற்றிய குறிப்புகளைக் காணலாம். எனவே சில அறிஞர்கள் இந்நூல்களை லேவியர் ஒருவரே எழுதியிருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

இந்நூல்கள் ஆதாமில் தொடங்கி எஸ்ரா நெகேமியாவின் காலம் வரையுள்ள இஸ்ராயேல் மக்களின் மீட்பின் வரலாற்றைத் தருகின்றன. குறிப்பேடுகள் ஆசிரியரின் இறையியல் இதற்கு முந்தைய நூல்களில் காணப்படும் இறையிலிலிருந்து வேறுபடுகின்றது. இதுவே இந்நூல்களை மற்ற நூல்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது. குறிப்பேடுகள் ஆசிரியர் ஏறக்குறைய கி.மு. 300 ஆம் ஆண்டு காலத்தில் வாழ்ந்திருக்லாம் என நம்பப்படுகிறது. குறிப்பேடுகள் நூல்கள் பல மூலங்களை ஆதாரங்களாகக் காட்டுகின்றன. அவைகளை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

முதலாவது அரசர்களின் குறிப்பேடுகள். இரண்டாவது வார்த்தைகள் debarim), இறைவாக்குகள் (nebuah), காட்சிகள் (hazah), ஆய்வுகதைகள் (midrash) ஆகியவை அடங்கும். முதல் பிரிவிற்கு ஆதாரமாக யூதா, இஸ்ராயேல் அரசர்களின் ஆட்சிக் குறிப்பேடு (2 குறிப் 16:11, 25:26 முதலியன), இஸ்ரயேல், யூதா அரசர்களின் குறிப்பேடு (2 குறிப்பேடு 27:7, 35:27, 36:8), இஸ்ரயேல் அரசர்களின் ஆட்சிக் குறிப்பேடு (2 குறிப் 20:34; 33:18), அரசர்களின் ஆய்வேடு (2 குறிப் 24:27) ஆகிற ஆவணங்கள் மேற்கோள் காட்டப்படுகின்றன. இரண்டாவது பிரிவிற்கு ஆதரவாக சாமுவேலின் குறிப்பேடு, நாத்தானின் குறிப்பேடு, திருக்காட்சியாளர் காத்தின் குறிப்பேடு (1 குறிப் 29:29),அகியாவின் இறைவாக்கு, திருக்காட்சியாளர் இத்தோவின் குறிப்பேடு (2 குறிப் 9:29), இறைவாக்கினர் செமாயாவின் குறிப்பேடு (2 குறிப் 12:15), இறைவாக்கினர் இத்தோ அபியஸவுக்கு எழுதிய ஆய்வேடு (2 குறிப் 13:22),அரசன்

யோசபாத்துக்கு ஏகூ கூறிய சொற்கள் (2 குறிப் 20:34), இறைவாக்கினர் எசாயா எழுதிய காட்சிகள் (2 குறிப் 32:32) போன்ற ஆவணங்கள் மேற்கோள் காட்டப்படுகின்றன.

இறையியல் ஆய்வுக் கதைகள் (Theological Midrashim): இங்கே*midrashim* (மித்ராசீம்) என்ற எபிரேயச் சொல்லை ஆய்வுகதைகள் என மொழிபெயர்த்திருக்கிறேன். இதை ஒரு நெடுங்கதை அல்லது நாவல் என்றும் புரிந்துகொள்ளலாம். ரபிக்கள் மறைநூல்களுக்கு பொருள் விளக்கங்கள் கொடுக்கும்போது இரண்டுவிதமான மித்ராஸ் படைப்புகளை படைக்கின்றனர். முதல்வகை மித்ராஸ் அகாதா (*Midrash Haggada*) என அழைக்கப்படுகிறது. இவ்வகை பொருள் விளக்கங்கள் வரலாற்றுக் கதைகளாகவோ புனைக் கதைகளாகவோ எழுதப்படலாம். பெரும்பாலும் இவ்வகை ஆய்வுகதைகள் புனைக்கதைகளாகவே இருக்கும். இரண்டாவதுவகை பொருள் விளக்கங்கள் மித்ராஸ் கலாகா (*Midrash Halaka*) என அழைக்கப்படுகின்றன. இவை நமது வாழ்வை நெறிப்படுத்துகின்ற சட்டங்களைப் பற்றியதாக இருக்கும். இதில் பொருள் விளக்கம் கொடுப்பவர்கள் அதற்குமுன் வாழ்ந்த ரபிக்களின் கருத்துக்களை மேற்கோள்களாகக் காட்டி பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பார்கள். விவிலியத்தில் வரக்கூடிய எஸ்தர், ரூத்து, தோபித்து, யூதித்து ஆகிய நூல்கள் உரைநடை நூல்களாக எழுதப்பட்டுள்ளன. இந்நூல்களில் வரலாற்று நினைவுகள் இருக்கலாம். ஆனால் முழுவதுமாக வரலாற்றுக் கதைகள் எனக் கூறமுடியாது. இந்நூல்கள் அவை எழுதப்பட்ட காலத்தில் நிலவிய சூழல்களுக்கு தீர்வுகள் தருகின்ற வகையில் சில முக்கியமான இறையியல் கருத்துக்களைத் தருவதற்காக எழுதப்பட்டவை எனலாம்.

மக்கபேயர் வரலாறு: சிரியாவிலிருந்து ஆட்சிசெய்த செலூக்கிய அரசனான நான்காம் அந்தியோக்கு எப்பிபான் (கி.மு. 175-164) கிரேக்க மொழியையும் கலாச்சாரத்தையும் மக்கள்மீது தீவிரமாகத் திணித்தான். தனது ஆட்சியின் கீழுள்ள நாடுகளை ஒன்றிணைப்பதற்காக இதைச் செய்தான். யூதர்களில் ஒரு சாரார் கிரேக்கக் கலாச்சாரத்தை ஆதரித்தனர். கிரேக்க வாழ்க்கை முறையை தங்கள் நடுவில் வளர்ப்பதற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் செய்தனர். அவ்வாறு கிரேக்கக் கலாச்சாரத்தை ஆதரித்தவர்கள் விளையாட்டு அரங்குகளில் நடந்த பயிற்சிகளில் முழு நிர்வாணத்துடன் கலந்து கொண்டனர். தங்களை கிரேக்கர்கள் என்று காட்டிக்கொள்வதற்காக விருத்தசேதனத்தால் ஆணுறுப்பில் ஏற்பட்ட தழும்புகளை அழித்தனர். யூதக் கலாச்சாரத்தை விரும்பிய யூதர்கள் இதை எதிர்த்தனர். கிரேக்கக் கலாச்சாரத்திற்கு எதிராக எழுந்தனர். கிரேக்கக் கலாச்சாரத் திணிப்பிற்கு எதிராக முதலில் புரட்சி செய்தவர் மத்தத்தியா என்னும் யூதர். அவரைத் தொடர்ந்து அவருடைய முதல் மகன் யூதா மக்கபே கிரேக்கர்களுக்கு எதிராக ஆயுதமேந்தி போர் புரிந்தார். யூதா மக்கபே இறந்தபின் புரட்சியைத் தொடர்ந்து ஆட்சியைக் கைப்பற்றி அரசர்களாக ஆட்சிசெய்த அவரது சகோதரர்கள் மற்றும் அவர்களின் வழிமரபினர்தான் மக்கபேயர்கள் என அறியப்பட்டார்கள். அவர்களின் வரலாற்றை மக்கபேயர்கள் நூல்கள் தருகின்றன.

பயணம் தொடரும்,

அருட்பணி ஆ. அலெக்ஸ்.cmf




அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm
புனித.அலோசியஸ் மேல்நிலைப்பள்ளி
தாராபுரம்


# ஞாயிறு மறையுரை



**தவக்காலம்**
**ஐந்தாம் வாரம்**
**17.03.2024**

**திருப்பலி வாசகங்கள்**

எரேமியா 31/31-34
எபிரேயர் 5/7-9
யோவான் 12/20-33

மலையடிவாரத்தில் இருந்த அந்த துறவி எப்போதும் எளிமையாய் இருப்பார். அதனால் அவரை அனைவரும் மதித்து வணங்கினர். இதைக்கண்ட செல்வந்தர் ஒருவர், அட இந்தத் துறவிக்கு இவ்வளவு செல்வாக்கா? பெரிய செல்வந்தனாகிய எனக்குக்கூட இவ்வளவு மதிப்பில்லையே என்று நினைத்துக் கொண்டான். மறுநாள் அவன் நேராக அந்தத் துறவியைக் காட்டில் சந்தித்தான். தனது விருப்பத்தை அவரிடம் கூறினான். அவரோ, நீயோ பெரிய செல்வந்தன் ஆடம்பர வாழ்க்கையை உன்னால் விடமுடியாது என்றார். பணக்காரனோ மறுத்துப் பேசினான். துறவியும், சரி, பார்க்கலாம் நாளை என்னை வந்து பார் என்று சொல்லி அனுப்பினார். அடுத்த நாள் அந்த செல்வந்தன் எளிய ஆடைகள் அணிந்து துறவியிடம் வந்தான். அவர் இட்டபணிகளை செய்து எளிய உணவை உண்டான். ஆனால் மனதிற்குள் புகழுக்காக இந்த வேலைகளை எல்லாம் செய்யவேண்டியுள்ளதே பொறுத்துக் கொள்வோம் என எண்ணினான். சில நாட்கள் கழித்து துறவி செல்வந்தனை அழைத்து உனக்கு இந்த வாழ்க்கை முறை சரிவராது. நீ இரட்டை மனநிலையோடு செயல்படுகின்றாய். என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

மாட்சியும் மகத்துவமும்: மாட்சிமையும் மகத்துவமும் கடவுளுக்கே உரிய பண்புகள். பார்வோனையும் அவர் தேர்களையும் குதிரை வீரர்கள் அனைவரையும் வென்று நான் மாட்சியுறும்போது, ‘நானே ஆண்டவர்’ என்று எகிப்தியர் உணர்ந்துகொள்வர் என்றார் விப 14:18. அதுவே ஆண்டவரின் அடையாளம். அவருடைய மாட்சிமையில் பங்குபெறவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம். அது துன்பங்களில் சோதனைகளில்

துலங்குகிறது. வெற்றியில் மிளிர்கிறது. யோவானின் சாட்சியம்: வாக்கு மனிதர் ஆனார்: நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சியைக் கண்டோம். அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருந்தார் யோ 1:14. கடவுளின் மாட்சிமையைக் கண்டோம் என்று யோவான் நற்செய்தியாளர் சான்று பகர்கின்றார். ஆண்டவரின் மாட்சிமை அவர் மகனில், மனுவுருவானவரில் வெளிப்படுகிறது. அவரில் காணப்பட்ட உண்மையில் மிளிர்ந்தது.

மெசியாவின் மாட்சி: அது பாடுகளின் வழி மாட்சி. மெசியாதாம் மாட்சி அடைவதற்குமுன் இந்தத் துன்பங்களைப் படவேண்டுமல்லவா! என்றார் லூக் 24:25. பிறப்பு இறப்பு இவை இரண்டையும் கடந்த உயிர்ப்பின் மாட்சி மெசியாவின் மாட்சி. இதனையே கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் பலன் தரும் என்ற உதாரணம் நமக்கு கூறும் உண்மை.

சீடனின் மாட்சி: மேலே கதையில் அந்தப் பணக்காரனுக்கு மாட்சிகைக்கு எட்டாக் கனியாயிற்று. குருவைப் போல் ஆகாமல் மாட்சிமை கொள்வது இயலாத ஒன்று. இயேசு இறைமகன். மேலும் இறைவனோடு நெருங்கிய உறவோடி உரிமையோடு கேட்கிறார். இவ்வாறு பேசியபின் இயேசு வானத்தை அண்ணார்ந்து பார்த்து வேண்டியது: ‘தந்தையே, நேரம் வந்துவிட்டது. உம் மகன் உம்மை மாட்சிபடுத்துமாறு நீர் மகனை மாட்சிபடுத்தும் யோ 17:1. என்று பாடுகளையும் மனமுவந்து ஏற்கிறார்.

பேதுருவின் மாட்சி: திருச்சபையின் தலைவராக பேதுருவை தேர்ந்தெடுத்ததும், அவரது சிலுவை மரணமும் கடவுளை மாட்சிபடுத்தும் செயலே.

நீ என்னை அன்பு செய்கிறாயா? என மும்முறை கேட்டுபின் ‘என் ஆடுகளைப் பேணிவளர்’ என்று இயேசு இராயப்பர் மேல் திருச்சபையை கட்டியதும் அவர் கடவுளை மாட்சிபடுத்தும் செயலே. பேதுரு எவ்வாறு இறந்து கடவுளை மாட்சிப்படுத்தப் போகிறார் என்பதைக் குறிப்பிட்டே அவர் இவ்வாறு சொன்னார் யோ 21:19. பாடுகளைக் கண்டு பயப்படாமல் இறைவனின் மாட்சில் பங்குபெறும் உரிமைமக்கள் நாம் என்ற பெருமையில் உயிர்ப்பின் மகிமை நோக்கி நடைபோடுவோம்.



# தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

எரே. 31 : 31-34, எபி. 5 : 7-9
யோவா. 12 : 20-33

17-03-2024

**திருப்பலி முன்னுரை**




பா. சேவியர்
திண்டுக்கல்


மண்ணில் மடிந்து பயன் தரும் கோதுமை மணியைப் போன்று பயன்தரும் மக்களாவோம் என்ற சிந்தனையைப் பெற்று, உடன்படிக்கையின் மக்களாக வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே உங்கள்அனைவரையும் தவக் காலத்தின் ஐந்தாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

நமக்கென்றுமட்டும் வாழாமல் பிறருக்காக வாழவதன் வழி யாக நாம் கிறிஸ்துவின் சீடர்கள் என்ற உயரிய அந்தஸ்தைப் பெற்று, உடன்படிக்கையின் மக்களாக வாழவும், இயேசு என்னும் நிலத்தில் புதைக்கப் பட்டு மீண்டும் புத்துயிர் பெற்று பலன் தரும் கோதுமை மணி யாக மாறிடவும் அழைக்கப் பட்டுள்ளோம்.

தமக்கென்று வாழ்வோர் தங்கள் வாழ்வை இழந்து விடுவர். தம் வாழ்வைப் பொருட்டாகக் கருதாமல் தொண்டு செய்வோர் நிலை வாழ்வைப் பரிசாகப் பெறுவர் என்ற கருத்தே இன்றைய வழிபாட்டின் குவிமையம்.

விசுவாசம் உள்ளவர்களால் மட்டுமே எதையும் இழக்க முடியும். எதையும் இழப்பவர் களால் மட்டுமே வாழ்வைப் பெற முடியும். துன்பத்தின் வழியாகத் தான் கடவுளை மகிமைப்படுத்த முடியும் என்ற மூன்று முத்தான செய்திகளை இன்றைய வார்த்தை வழிபாடு நமக்கு வழங்குகிறது.

கோதுமை மணி தன் சுய உருவை இழந்து பன்மடங்கு பலன் தருவதைப்போல, நாமும் சுயநலம் இழந்து பிறருக்குப் பலன்தரும் மானிடராக இவ் வுலகில் வாழவும், துன்பங்கள் வழியே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொள்ளவும் இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

இறைவன் வழங்கிய உடன் படிக்கையை இஸ்ரயேலர் மீறினர். அதை உடைத்தும் போட்டனர். எனினும் இறைவன் புதிய உடன் படிக்கை வழியாக மன்னிப்பையும் பாவ விடுதலையையும் வழங்கு கிறார் என்பதை இன்றைய முதல்வாசகம் படம் பிடித்துக் காட்டுகிறது. கடவுளின் பேரன்பைப் பெற்று புதிய உடன்படிக் கையின் மக்களாக வாழ அழைக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

நாம் நம் வாழ்வில் சந்திக்கும் துன்ப துயரங்களை இன்முகத் துடன் ஏற்றுக்கொள்வதன் மூலமாக நாம் இறைவனுக்குக் கீழ்ப்படியும் மக்கள் என்று சான்று பகர அழைக்கிறது இன்றைய இரண்டாம் வாசகம். நாம் எல்லாவற்றிலும் இயேசுவைப் போல் ஆகவேண்டும் என்ற பவுலடியாரின் கருத்தைச் சுமந்து வரும் இவ்வாசகத்தைக் கவன முடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) நிறைவாழ்வின் ஊற்றாகத் திகழும் அன்பு இறைவா, உம்மால் தேர்ந்துகொள்ளப்பட்ட எம் திருத் தந்தை, ஆயர்கள், அருட் தந்தையர், அருட்சகோதரிகள் அனைவரும் துன்பங்களைக் கண்டு துவண்டு விடாமல் துணிந்து நிற்கவும், உம் திருவார்த்தையின் ஒளியில் திரு அவையை முன்னின்று வழி நடத்தி, மகிழ்ச்சியூட்டும் இறையரசைக் கட்டி யெழுப்பவும் வரமருள வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடு கிறோம்.

2) எங்கள் அன்புத் தந்தையே இறைவா, இழப்பவர் வாழ்வு பெறுவர் என்பதை உணர்ந்து, தன்னிடம் இருப்பதிலிருந்து கொடுத்த சக்கேயுவைப் போல் வாழ்வைத் தொடங்கி, தன்னிடம் இருப்பதையெல்லாம் கொடுத்த ஏழைக் கைம்பெண்ணைப் போல் வாழ்வைத் தொடரவும், துன்பங்கள் வழியே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு உமக்குச் சான்று பகரும் மக்களாய், பலன் தரும் கோதுமை மணிகளாய் வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) நம்பிக்கை அருள்பவரும், கருணையும் இரக்கமும் நிறைந்த வருமான அன்பு இறைவா, நோய் களினால் பாதிக்கப்பட்டு வீடுகளிலும் மருத்துவ மனைகளிலும் சிகிச்சை பெற்று வரும் ஒவ்வொருவருக் காகவும் உம்மை மன்றாடுகிறோம். வாட்டி வதைக்கும் நோய்களில் இருந்து அவர்கள் விடுபட்டு பூரண சுகமடைந்து உம்மைப் புகழ்ந்தேற்ற அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) எல்லோருக்கும் எல்லாமுமாய் இருக்கின்ற அன்பு இறைவா, அரசுத் தேர்வு எழுதி வரும் எம் பங்கின் அனைத்து மாணவ மாண வியர்களையும் உம் திருப்பாதத்தில் வைக்கின்றோம். பயம், கவலை, மறதி போன்ற தீய சக்திகளிடமிருந்து அவர்கள் விடுபட்டு, ஞானத்தோடு தேர்வுகளை எழுதி, உயர்ந்த மதிப்பெண்களைப் பெற்றிட உமது ஆவியின் வல்லமையை அவர்கள் மேல் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# ஞான வெளிச்சம் தரும் பொன் மொழிகள்



குற்றவாளிக்குக் காட்டும் கருணை
நிரபராதிக்குச் செய்யும் கொடூரம். –ஆடம் ஸ்மித்

உங்களிடமிருந்து விரோதத்தால் பிரிபவர்
செய்யும் முதல் காரியம் உங்களைக் குற்றவாளியாக்குவார்
அதன்மூலம் தன்னை நியாயப்படுத்துவார்

கோபத்தைக் காட்டிக்கூட ஒருவனைக் காயப்படுத்திவிடு, ஆனால்
ஒருபோதும் அன்பைக் காட்டி ஏமாற்றிவிடாதே.

சாவு உங்களைப் பார்த்து சிரிக்கும்போது
அதனைப் பார்த்து சிரித்துவிடு. – மார்க்கஸ் அவ்ரெலியஸ்

பழிவாங்குவது, குரூரப் புத்தியின் நீதி. –பிரான்சிஸ் பேகன்

நடிப்பவர்களிடம் மனம்விட்டுப் பேசக்கூடாது.
மனம்விட்டுப் பேசுபவர்களிடம் நடிக்கக்கூடாது.

உங்கள் நற்செயல்களை ஏற்றுக்கொள்ளாதவனே
உங்களுக்கு எதிரியாக இருப்பான்.

தொல்லை செய்யாமல் என்றும் தொடர்பில் இருங்கள்
யாரும் உங்களைத் தொலைக்க முயற்சிக்க மாட்டார்கள்.

பிறருக்காக நாம் வாழும்போது நம்மை இழந்துவிடுவோம்.
நமக்காக வாழும்போது
பிறர் நம்மை இழக்கத் தயாராகிவிடுவார்கள்.

அரசியலை நாம் தவிர்போமானால்
நம்மால் தவிர்க்கப்படவேண்டியவர்கள்
நம்மை ஆளநேரிடும். – பிளேட்டோ

எதையும் செய்து முடிக்கும்வரை,
செய்ய முடியாது என்பதுபோலத்தான் இருக்கும்

# தமிழே..அமுதே..எனதுயிரே




கதையை படித்தேன்
எழுதி கொண்டேன்
அப்படி சொன்னது
எப்படி தெரியும்

மேலே உள்ள தொடர்களைப் படித்துப் பாருங்கள். இவற்றை இயல்பாகப் படிக்க இயலாதவாறு சொற்களுக்கு இடையேஇ ஒரு ஓசை இடைவெளி இருப்பதை உணர முடிகிறதல்லவா? அவற்றை கீழே உள்ளவாறு படித்துப் பாருங்கள்.

கதையைப் படித்தேன்.
எழுதிக் கொண்டேன்.
அப்படிச் சொன்னது.
எப்படித் தெரியும்.

இப்போது இயல்பாக படிக்க முடிகிறது அல்லவா? மேலும் நாம் பேசும்போது இவ்வாறு தான் பேசுகிறோம். ஒரு சொல்லின் முதல் எழுத்து க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்து வரிசைகளில் ஒன்றாக இருந்தால் அதற்கு முன்னால் உள்ள சொல்லில் இறுதியில் அந்த வல்லின மெய் எழுத்தைச் சேர்த்து எழுத வேண்டும். இதனை வல்லினம் மிகல் என்று கூறுவர். எல்லா இடங்களிலும் வல்லின மெய் எழுத்து மிகும் என்று கூற முடியாது.

மிதந்து சென்றது
செய்து பார்த்தான்
படித்த கவிதை
பெரிய தாவரம்

ஆகிய சொற்களில் வல்லினம் மிகவில்லை என்பதைக் கவனியுங்கள். இவ்வாறு வல்லின மெய் மிகக் கூடாத இடங்களை வல்லினம் மிகா இடங்கள் என குறிப்பிடுவர்.

மண்வெட்டி கொண்டு வா, மண்வெட்டிக் கொண்டு வா இவற்றில் முதல் தொடர் மண்ணைவெட்டி எடுத்து வா என்னும் பொருளைத் தருகிறது.

இரண்டாம் தொடர் மண்ணை வெட்டி எடுத்து வா என்னும் பொருளைத் தருகிறது. இவ்வாறு பொருள் தெளிவை ஏற்படுத்தவும் வல்லினம் மிகுதல் உதவுகிறது.

லீமா விக்டோரியா, தமிழாசிரியை.

# விடியல்

9



## எளிமை

மேன்மை மிகுந்தவர்களுக்கு மகிழ்ச்சி நிறைந்த வணக்கங்கள்...

மகளே சீயோன்! மகிழ்ந்து களிக்கூரு; மகளை எருசலேம்! ஆர்ப்பரி. இதோ! உன் அரசர் உன்னிடம் வருகிறார். அவர் நீதியுள்ளவர்; வெற்றி வேந்தர்; எளிமையுள்ளவர்; கழுதையின் மேல்இ கழுதை குட்டியாகிய மறியின்மேல் ஏறி வருகிறவர்.
செக்கரியா 9:9

ஆம்! அன்பிற்குரியவர்களே..
நம்முடைய இறைவன் மாட்டு குடிலில் பிறந்து, மாற்றான் கல்லறையில் அடக்கம் செய்ய ப்பட்டு தன் வாழ்வு முழுவதும் எளிமையின் வடிவமாய் வாழ்ந்தவர்.

உம்முடைய தொடக்கம் எளிமையாக இருப்பினும் உன் வருங்காலம் வளமைமிகக் கொழிக்கும்.
யோபு8:7

நம்முடைய வாழ்வில், சிந்தனைகளில், வார்த்தைகளில், செயல்பாடுகளில் எளிமையை விரும்பி ஏற்கும்போது, நாம் எண்ணிறாத வளங்களும், நலன்ங்களும் நமக்கு கிடைக்கும்.

எலியா நம்மை போன்ற எளிமையான மனிதர் தாம். அவர் மழை பெய்யக் கூடாது என்று உருக்கமாக இறைவனிடம் வேண்டினார்; மூன்று ஆண்டு ஆறு மாதம் மழையில்லாத போயிற்று.–
(யாக்கோபு 5:17)

எளியவர்களின் மன்றாட்டு இறைவனின் பதம் வந்தடையும். நம்முடைய தோற்றங்களில் வெளி அடையாளங்களில் ஏற்படும் எளிமை அல்ல ...உள்ளத்தில் நம்முடைய செயல்களில், மன மாற்றத்தில் ஏற்படுகின்ற எளிமையே நீடித்த அழகையும், நிலையான புகழையும், இறைவனின் அன்பையும் நமக்கு பெற்று தரும்.
எளிமை உள்ளம் கொண்ட மனிதர்கள் உள்ளம்; இறைவன் வாழும் அழகிய இல்லம். எளிமையாய் வாழ்வோம்.. இறைசாயலை அணிவோம்.. இனிய உறவுகளோடு தவக்கால பயணத்தை தொடர்வோம்..

சிறந்தவை...

ஒரு ஊரில் வயதான சில பெரியவர்கள் வார இறுதியில் யாராவது ஒருவர் வீட்டில் ஒன்று கூடி பல விஷயங்களைப் பற்றி கலந்து பேசுவதை வழக்கமாக கொண்டிருந்தார்கள். அப்படி அவர்கள் ஒன்று கூடிப் பேசும்போது அவர்களில் பலருக்கும் மிகவும் சுவையான தேநீர் பருக வேண்டும் என்று நெடுநாள் ஆசை இருந்தது. தங்களில் யாராவது ஒருவர் வீட்டில் மிகவும் சுவையுள்ள தேநீர் அடுத்த முறை வழங்கப்பட்டால் மகிழ்ச்சியாக இருக்கும் என்று தங்களுடைய பதிலை கூறிவிட்டு சென்றார்கள். சில வாரங்கள் கழித்து ஒரு முதியவர் வீட்டில் இதேபோல வழக்கமான சந்திப்பு நடந்தது. அந்த வீட்டினுடைய உரிமையாளர் மிகவும் பணக்காரர். அந்த வீட்டின் பணியாளர் அருமையான தட்டில், பல அழகான குவளையில் சூடான தேநீரை அங்கு அமர்ந்திருந்த அனைத்து முதியவர்களுக்கும் பரிமாற தொடங்கினார். அதைக் குடித்த அத்தனை வயதானவர்களுக்கும், மிகவும் ஆச்சரியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. தாங்கள் நெடுங்காலமாக ஆசைப்பட்ட சுவைமிக்க தேநீர் இன்று கிடைத்துவிட்டது என்று ஒவ்வொருவரும் எண்ணி மகிழ்ச்சியோடு தேநீரை பருகினார்கள். நெடுநாள் நம்பிக்கை வீணாகவில்லை. உண்மையாகவே இப்படிப்பட்ட சுவையான, மனம் மிகுந்த, அற்புதமான தேநீரை பருகியதில் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி என்று ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்தை பரிமாறிக் கொண்டனர்.

இது போன்ற ஒரு சுவையான தேநீரை எங்கள் வாழ்நாளில் இதுவரைக்கும் பருகியதே இல்லை என்பதாக கூறினர். பிறகு உங்களுக்கு எங்கிருந்து இந்த சுவையான தேநீருக்கான டீத்தூள் கிடைத்தது? என்று அனைவரும் விசாரித்தனர். அப்பொழுது அந்த வீட்டு உரிமையாளர் அவர்களிடம் நான் உங்களுக்கு சுவையான தேநீர் தர பல கடைகளுக்கு ஏறி இறங்கினேன். பல உயர்ந்த நிறுவனங்களின் டீத்தூளை வாங்கி சுவைத்து பார்த்தேன். எதுவுமே சிறப்பாக இல்லை. இந்த நிலையில் சில நாட்களுக்கு முன்பு ஒரு கிராமத்தில் உள்ள விவசாய பண்ணையிற்கு சென்றிருந்தேன். அங்கு வேலை செய்த ஒரு கூலி விவசாயியின் வீட்டில் தேநீர் தந்து என்னை உபசரித்தனர். அங்குதான் இந்த சுவைமிக்க தேயிலைத் தூளை நான் கண்டறிந்தேன். நீங்கள் பருகிய இந்த சுவையான தேநீர் அவர்கள் வழங்கிய தேயிலைத் தூளிலிருந்து தான் தயாரிக்கப்பட்டது என்று கூறினார். அங்கு குழுமியிருந்த அனைவரும் இதை ஆர்வத்தோடு கேட்டதோடு மட்டுமல்லாமல் மேலும் ஒரு கப் தேநீர் வாங்கி பருகினார்கள். அப்போது அந்த வீட்டின் உரிமையாளர் நண்பர்களே! இந்த சுவையான தேயிலைத் தூளை தேடி கண்டறிந்தபோது நான் ஒரு உண்மையையும் தெரிந்து கொண்டேன். அதாவது இவ்வுலகில் சிறப்பான பொருட்களெல்லாம் விலையுயர்ந்ததுமல்ல. மேலும் கடினப்பட்டு கண்டறிய வேண்டியதுமல்ல. காரணம் சிறப்பான பல விஷயங்கள் மிக எளியவர்களிடமும் உள்ளது என்று கூறினார். இதை ஆமோதித்து அங்கிருந்தவர்கள் கைதட்டி அவரை வாழ்த்தி சென்றார்கள்.

ஆம்! சிறப்பானது மிகச்சிறந்தவை நம் மத்தியிலே கூட இருக்கலாம். அதை ஏற்றுக் கொள்வதற்கான, அங்கீகரிப்பதற்கான மனப்பக்குவம் தான் நம்மில் வளர வேண்டும். நம் மத்தியில் உள்ள சிறந்தவைகளை, நல்லவர்களை, மனதார ஏற்போம். அங்கீகரிப்போம். வாழ்த்துவோம்... பாராட்டுவோம்... ஊக்கப்படுத்துவோம்... இறைவழியில் நித்தமும் தவக்காலத்தில் பயணத்தை தொடர்வோம்...



# திருக்குறளின் தேனமுதம்



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm

## குறள் 87

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்

## குறள் விளக்கம்

விருந்தோம்புதலாகியவேள்வியின் பயன் இவ்வளவுஎன்றுஅளவுபடுத்தி கூறத்தக்கதுஅன்று,விருந்தினரின் தகுதிக்குஏற்றஅளவினதாகும்

## சிந்தனை

தாழக்கிடப்போரை தற்காப்பதே தர்மம் என்று வைகுண்ட ஐயா கூறுவார்கள். ஒரு மனிதன் எவ்வளவுக்கு எவ்வளவு தாழ்த்தப்பட்டு கிடக்கின்றானோ அல்லது அடிமைப்பட்டுக் கிடக்கிறானோ அவன் நிலைக்கு இறங்கி அவனுக்கு உதவிசெய்வது பெரிய தர்மம். அது ஒரு வேள்வி, அது ஒரு யாகம் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். எனவே நம்முடைய விருந்தோம்பல் என்பது ஒரு யாகம் ஒரு வேள்வி என்று நாம் சொல்லலாம்.

மிகமிக அத்தியாவசியத் தேவையில் இருப்போருக்கு உதவி செய்வதுதான் மிகப்பெரிய யாகம் எனக் குறிப்பிடுகின்றார் வள்ளுவர்

அதுபோல் ஆண்டவரும் லூக்கா 14ம் அதிகாரத்தில்,நீங்கள் விருந்து வைக்கின்றபொழுது உங்களது உறவினர்களையும் நண்பர்களையும் அண்டை வீட்டாரையும் அழைக்காதீர்கள் அதனால் என்ன பயன். அவர்கள் மீண்டும் உங்களை அழைக்கப் போகின்றார்கள். எதுவுமே இல்லாதவர்கள், யாருமே உதவி செய்யாதவர்களை நீங்கள் அழைத்து அவர்களுக்கு விருந்து கொடுக்கின்ற பொழுதுதான் அது ஒரு யாகம். அத்தகைய மன நிலையை நாமும் பெற்றுக் கொள்ளவேண்டும் என்கிறார்.

